தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 129/ந/2024

நாள்.10.10.2024

திரு.C.பாஸ்கரன்,
ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
வாலாஜாபேட்டை நகராட்சி, வாலாஜாபேட்டை – எதிர்மனுதாரர்

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் கஸ்பா 'A', காமராஜர் நகர் முதல் தெரு, கதவு எண்.22, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.C.பாஸ்கரன் என்பவரின் 30.10.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.10.2023 அன்று பெறப்பட்டு, 129/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் கஸ்பா 'A', காமராஜர் நகர் முதல் தெரு, கதவு எண்.22, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.C.பாஸ்கரன் என்பவர் தனது 30.10.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" நான் வாலாஜாபேட்டை நகராட்சியில் 25.08.2006 முதல் 30.04.2020 வரை அலுவலக இரவு காவலர் பணி புரிந்து வந்து 30.04.2020 பிற்பகல் ஓய்வு பெற்றேன். என்னுடைய ஊதியத்தில் பிடித்தம் செய்த பங்களிப்பு ஓய்வூதிய தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகை அதற்கான வட்டித் தொகை மற்றும் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகை ரூ.10,000/– மற்றும் காசாக்கப்படும் விடுப்புகளின் நிலுவைத் தொகை ரூ.40,000/– ஆகியவைகள் இதுநாள் வரை வழங்கப்படவில்லை. மேற்படி மூன்று தொகைகளை வழங்க ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 04.09.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை 13.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 04.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. விசாரணைக்கு வரும்போது புகார் மனு தொடர்பான முழு விவர அறிக்கையுடன் வருமாறு ஆணையாளர் அறிவுறுத்தப்பட்டார்.

4. மனுதாரர் திரு.C.பாஸ்கரன் 13.09.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" நான் வாலாஜாபேட்டை நகராட்சியில் 25.08.2006 முதல் 30.04.2020 வரை அலுவலக இரவு காவலர் பணி புரிந்து வந்து 30.04.2020 பிற்பகல் ஓய்வு பெற்றேன். என்னுடைய ஊதியத்தில் பிடித்தம் செய்த பங்களிப்பு ஓய்வூதிய தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகை அதற்கான வட்டி மற்றும் சேமநலநிதிச் சந்தா தொகை மற்றும் நிர்வாக பங்குத்தொகை ரூ.10,000/– மற்றும் காசாக்கப்படும் விடுப்புகளின் நிலுவைத்தொகை ரூ.40,000/– ஆகியவைகளில் சிறப்பு சேமநலநிதி சந்தாபிடித்தம் ரூ.35,156/–ம், Encashment of Earned leave மொத்தம் ரூ.1,31,916/–ல் ரூ1,30,000/– எனக்கு வழங்கப்பட்டு விட்டது. மீதம் ரூ.1,916/–ம், CPS பணப்பயன்கள் மட்டும் எனக்கு இதுநாள் வரை வழங்கப்படவில்லை.

இன்று 13.09.2024 இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்ட எனது கோரிக்கைகளை நிறைவேற்றித்தரும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

1. மேற்படி Encashment of Earned leave மீதத்தொகை ரூ.1,916/– கிடைத்திடவும்

2. CPS பணப்பயன் தொகை உடனடியாக கிடைத்திடவும் ஆவண செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) நகராட்சி ஆணையாளர் தனது 13.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"திரு.C.பாஸ்கரன், அவர்களுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு தொகைகள் வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

| வ. எண். | தொகை விவரம் | தொகை. ரூ. | தேதி |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | சிறப்பு சேமநலநிதி தொகை (நிர்வாக பங்கு தொகை(ம) வட்டி தொகை) | ரூ.35,156/– | 04.05.2022 |
| 2. | ஈட்டிய விடுப்பு (ம) ஈட்டா விடுப்பு | ரூ.1,31,916/– | 18.04.2022 |
| 3. | ஈட்டிய விடுப்பு (ம) ஈட்டா விடுப்பு | ரூ.50,000/– | 22.08.2022 |
| 4. | ஈட்டிய விடுப்பு (ம) ஈட்டா விடுப்பு | ரூ.31,916/– | 06.01.2024 |

இன்று 13.09.2024 இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்ட எனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தின் முன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

1. வாலாஜாபேட்டை நகராட்சி இரவு காவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.சி.பாஸ்கரன் என்பவரது கணக்கில் பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட பங்குத்தொகை மற்றும் நிர்வாக பங்குத்தொகை அரசு கணக்கில் மார்ச் 2020 வரை 20.03.2024 அன்று செலுத்தப்பட்டது. ஏப்ரல் 2020 மாதத்திற்கான சந்தாதொகை மற்றும் நிர்வாக பங்குத்தொகையினை வரும் நாட்களில் 15 தினங்களுக்குள் செலுத்தி விடுகிறேன்.
2. மனுதாரருக்கு சேர வேண்டிய தொகைகளை செலுத்துவதற்கான முன்மொழிவினை Government Data Centre, சென்னை அலுவலகத்திற்கு 15 தினங்களுக்குள் அனுப்ப வழிவகை செய்து தரப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள், ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தான் வாலாஜாபேட்டை நகராட்சியில் 25.08.2006 முதல் 30.04.2020 வரை அலுவலக இரவு காவலராகப் பணிபுரிந்து 30.04.2020 பிற்பகல் ஓய்வு பெற்று விட்டநிலையில் தன்னுடைய ஊதியத்தில் பிடித்தம் செய்த கீழ்க்கண்ட ஓய்வூதிய பணப்பலன்களை இதுநாள் வரை தனக்கு வழங்கப்படவில்லை என்றும் மேற்படி தொகைகளை பெற்றுத்தர ஆவண செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

பங்களிப்பு ஓய்வூதிய தொகை மற்றும் நிர்வாக பங்கு தொகை அதற்கான வட்டி மற்றும் சேமநலநிதிச் சந்தா தொகை மற்றும் நிர்வாக பங்குத்தொகை ரூ.10,000/- மற்றும் காசாக்கப்படும் விடுப்புகளின் நிலுவைத்தொகை ரூ.40,000/- ஆகியவைகளில் சிறப்பு சேமநலநிதி சந்தா பிடித்தம் ரூ.35,156/-ம், Encashment of Earned leave மொத்தம் ரூ.1,31,916/-ல் ரூ.1,30,000/- தனக்கு வழங்கப்பட்டு விட்டதால் மீதம் ரூ.1,916/-ம், CPS பணப்பயன்கள் மட்டும் தனக்கு இதுநாள் வரை கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளதை மனுதாரரின் நேரடி வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

வாலாஜாபேட்டை நகராட்சியில் இரவு காவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.சி.பாஸ்கரன் அவர்களது கணக்கில் பங்களிப்பு ஓய்வூதியத்திட்டப்பங்குத் தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகை அரசு கணக்கில் கடந்த மார்ச் 2020 வரை 20.03.2024 அன்று செலுத்தப்பட்டுவிட்டதையும், ஏப்ரல் 2020 மாதத்திற்கான சந்தாதொகை மற்றும் நிர்வாக பங்குத்தொகையினை வரும் நாட்களில் 15 தினங்களுக்குள் செலுத்தி, மனுதாரருக்கு சேர வேண்டிய தொகைகளை செலுத்துவதற்கான முன்மொழிவினை Government Data Centre, சென்னை அலுவலகத்திற்கு அனுப்ப வழிவகை செய்து தரப்படும் என்பதையும் வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையாளரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரர் தனக்கு சேரவேண்டிய ஓய்வூதியப் பணப்பயன்களை பெறுவதற்கு காலதாமதங்கள் ஏற்பட்டு, பின்னர் அவர் இம்முறைமன்ற நடுவத்தை நாடிய பின்னரே நகராட்சி ஆணையரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும் கடந்த மார்ச் 2020 வரையிலான ஓய்வூதியத்திட்டப்பங்குத் தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகை அரசு கணக்கில் நான்கு வருட காலதாமதத்திற்கு பிறகு நகராட்சியால் 20.03.2024 அன்று செலுத்தப்பட்டுள்ளது. மனுதாரரின் வயது மற்றும் நிலையினை கருத்திற்கொண்டு மேற்கண்ட காலதாமதத்தினை தவிர்த்திருக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இனிவருங்காலங்களில் இதுபோன்ற காலதாமதங்களை தவிர்க்கும்படி வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு மனுதாரருக்கு சேரவேண்டிய ஏப்ரல் 2020 மாதத்திற்கான சந்தா தொகை மற்றும் நிர்வாக பங்கு தொகை இவற்றை செலுத்துவதற்கான முன்மொழிவினை Government Data Centre, சென்னைக்கு உடனடியாக அனுப்பி மனுதாரருக்கு மேலும் தாமதமில்லாமல் கிடைத்திட வழிவகை செய்திடுமாறு வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

எனவே, இனி வருங்காலங்களில் பொதுமக்கள், ஓய்வூதியர்கள் மற்றும் மூத்த குடிமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

2024ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 10–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.C.பாஸ்கரன்,
அலுவலக இரவு காவலர்(ஓய்வு)
22, காமராஜர் நகர் முதல் தெரு,
கஸ்பா 'A' ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி,
வாலாஜாபேட்டை.
இராணிப்பேட்டை மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)